# ஜாமக்காரன்
# JAMAKKARAN

VOLUME - 1 ISSUE - 1


*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*


0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com




**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

ஜாமக்காரன் வழியாக உங்கள் அனைவரோடும் தொடர்புக்கொள்வதில் சந்தோஷமடைகிறேன்.

இந்த மாதத்துடன் **அன்னிய பாஷையைப்பற்றிய** செய்திகளை எழுதி முடித்துவிடலாம் என்று நினைத்தேன் முடியவில்லை. இதுவரை அன்னியபாஷையைப்பற்றிய செய்திகளை வாசித்தவர்கள் தங்களுக்கு எவ்வளவு பிரயோஜனமாக இருந்தது என்பதையும், பலருக்கு விழிப்புணர்வு உண்டாகியதாக அவர்கள் எழுதியபோது தேவனை துதித்தேன்.

பலர் ஏன் AG சபையையே குறிவைத்து தாக்கி எழுதுகிறீர்கள், நீங்கள் விரும்புகிற சபைகளில் அதுவும் ஒன்று என்று நீங்கள் ஜாமக்காரனில் முன்பு ஒருமுறை எழுதியிருக்கிறீர்களே! இப்போது ஏன் இந்த திடீர் மாற்றம் என்று உள்ளூரிலும் வெளிஊர்களிலுமிருந்து பலர் கடிதம் மூலமாக என்னிடம் கேட்டு எழுதியுள்ளார்கள்.

எந்த ஒரு சபையையும் குறிவைத்து தாக்க நான் என்ன? R.S.S.தீவிரவாதத்தை சேர்ந்தவனா? பல வருடங்களாக ஜாமக்காரனை வாசிக்கும் நீங்கள் என்னை புரிந்து கொண்டது இவ்வளவுதானா?

**CSI, லூத்தரன்,செவந்த்டே,மார்தோமா,கத்தோலிக்க சபைகள்,மிஷனரி** ஸ்தாபனங்கள் இப்படி பல சபைகளில் அல்லது ஸ்தாபனங்களில் உள்ள **ஊழல்களை, தவறானஉபதேசங்களை**மட்டுமே குறிப்பிட்டு விமர்சித்திருக்கிறேன். எந்த சபைகளையும்


ஜாமக்காரன் JAMAKKARAN



## செப்டம்பர் 2016

தனிப்பட்ட முறையில் தாக்கவில்லையே!. இப்படி விமர்சிப்பதால் மேலே குறிப்பிட்ட சபைகளை மிஷனரி ஸ்தாபனங்களை நான் தாக்குகிறேன் அல்லது வெருக்கிறேன் எனறா அர்த்தம்?. அப்படி பார்த்தால் வேதத்தில் **நிருபங்களை** எழுதிய சிஷர்களை அப்போஸ்தவர்களைக் குறித்து யோசித்து பாருங்கள். அவர்கள் தாங்கள் எழுதிய நிருபங்கள் மூலம் சபைகளை கண்டித்து எழுதியதை அவர்கள் சபைகளை தாக்குகிறவர்கள் என்றா நீங்கள் நினைக்கிறீர்கள்?.

என் ஜாமக்காரன் பணியைத்தான் செய்தேன். கர்த்தர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

வாசகர்கள் யாவருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன். நீங்கள் அனுப்பிய **காணிக்கைகள் யாவும் ஆன்-லைன்** மூலமாக என் வங்கிக்கு வந்து சேர்ந்தது! நன்றி. மணியாடர்,காசோலை அனுப்பியவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

கர்த்தரின் நாமத்துக்கு மகிமை உண்டாவதாக.

கர்த்தரின் உன்னத பணியில்

✍ **டாக்டர்.புஷ்பராஜ்**

**(இந்த மாத ஜாமக்காரனை அக்டோபர் மாதம்தான் அனுப்ப முடிந்தது.)**

## வெளிநாட்டு வாழும் வாசகர்கள் கவனிக்கவும்:

' வெளிநாட்டுக்கு அனுப்பும் ஜாமக்காரன் பத்திரிக்கையின் ஸ்டாம்ப் விலை மிக அதிகமானதால் ஒரு ஜாமக்காரனுக்கு 51ரூபாய், 64 ரூபாய் என்று ஸ்டாம்ப் ஒட்ட வேண்டியிருப்பதால் கம்பியூட்டர் வைத்திருப்பவர்கள் உங்கள் ஜாமக்காரனை PDFல் பெற்றுக்கொண்டு அதை டவுன்லோட் செய்து வீட்டில் உள்ள யாவரும் வாசிக்கவும். மற்றவர்களுக்கும் காப்பி எடுத்து உதவவும் வேண்டுகிறேன். ஆகவே எங்கள் **இமெயில்க்கு ஜாமக்காரனை அனுப்பவும்** என்று எங்களுக்கு எழுதினால் போதும். உங்கள் இமெயில் ஐடியை நாங்கள் குறித்துக்கொண்டு ஜாமக்காரனை **அச்சகத்துக்கு அனுப்பும் முன்பே** உங்களுக்கு **PDF வழியாக** பெற்றுக்கொள்ளலாம்.

' இதன்மூலம் லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஸ்டாம்ப் வாங்க செலவு செய்யாதபடி **எங்களுக்கு நீங்கள் உதவலாம்.** மற்றவர்களுக்கும் **ஜாமக்காரன்** தேவையானவர்களுக்கும் இதை அறிவியுங்கள்.

' இவ்விஷயத்தில் உங்கள் ஒத்துழைப்பை மிகவும் நாடுகிறேன். வெளிநாட்டில் ஜாமக்காரன் வாசிப்போர் எண்ணிக்கை **மிகவும் அதிகமாக** பெருகிவிட்டது. ஒத்துழைக்கவும். நன்றி.

# அந்நியபாஷை குழப்பம்

# அத்தியாயம் - 6

கடந்த சில மாதங்களாக அன்னிய பாஷை குறித்தும் பெந்தேகோஸ்தே சபைகளின் தவறான உபதேசங்களை குறித்தும் பெந்தேகோஸ்தே சபை உபதேசத்தை பிரசங்கிக்கும் பிரபல ஊழியர்கள். பாஸ்டர்கள் எழுதிய கருத்துக்கு என் விளக்கங்களை எழுதி வந்தேன்.

சிலர் நான் குறிப்பிட்ட அந்த **நான்கு ஊழியர்களின்** முழு கடிதங்களையும் முழுமையாக ஏன் பிரசூரிக்கவில்லை, சில பகுதிகளைதானே வெளியிட்டீர்கள் ஏன்? என்று கேட்டு எனக்கு கடிதம் எழுதினார்கள். அந்த நான்கு ஊழியர்களின் முழு கடிதங்களையும் கூட்டாமல் குறைக்காமல் 2007 ஜாமக்காரனில் வெளியிட்டுள்ளேன். இப்போது அவர்கள் எழுதிய கடித்தத்தில் எழுதப்பட்ட மக்களை குழப்பும் வேதவசன அடிப்படையில்லாத விஷயங்களை மட்டும் குறிப்பிட்டு வெளியிட்டு, அதற்கு என் விளக்கங்களையும் எழுதினேன்.

சகோ. ஸ்டான்லி BYM (வெல்லூர்) அவர்கள் எழுதிய விளக்கத்துக்கு, அவர் எழுதியதில் வேத வசன அடிப்படையில்லாத விவரங்களுக்கு நான் என் பதிலாக விளக்கம் கூறும்போது அவரின் ஊழியத்தின் **மைய உபதேசமாக** அன்று அவர் அறிமுகப்படுத்திய ஆவியில் நிறம்பி, அன்னிய பாஷை பேசி **நடனமாடும்** உபதேசம் தவறு என்பதை சுட்டிக்காட்ட அவர் கூட்டத்தில் அன்று நானே நேரில் சென்று கலந்துகொண்டபோது, நான் கண்ட காட்சிகளையும் அந்த கூட்டத்தில் நான் கலந்துகொள்ள காரணமாயிருந்த சகோ.DGS.தினகரன் அவர்களின் சம்பாஷனைகளையும் நான் எழுதவேண்டியது அவசியமாயிற்று.

அதை வாசித்த சிலர் அதை நீங்கள் எழுதாமல் இருந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அப்படி அவைகளை நான் எழுதாமல் இருப்பது இந்த கட்டுரை முழுமை பெற்றது ஆகாது? பெந்தேகோஸ்தே சபையினர் மக்களை ஜெபத்தில் **பரவச உச்சநிலைக்கு** (மனோதத்துவ நிலைக்கு) செயற்கையாக கொண்டுபோகிறார்கள். அதில் சத்தமாக **கூக்குறல் இடுவது**, **அல்லேலூயா** வார்த்தையை கைகளை தட்டி சத்தமாக ஆர்பரிப்பது சத்தமாக மக்களை **கத்த விடுவது, ஸ்தோத்திரத்தை அதிவேகமாக** கூற வைத்து அதன் அடுத்த கட்டமாக **குதிப்பதிலும், நடனமாடுவதிலும்** மக்களை கொண்டுவந்து நிறுத்திவிடுகிறார்கள்.

**இவர்கள்தான் பழைய ஏற்பாட்டு பெந்தேகோஸ்தே கிறிஸ்தவர்கள் எனப்படுகிறார்கள்.**

பெந்தேகோஸ்தே சபையினர் செய்யும் இப்படிப்பட்ட பயித்தியக்கார கேலி கூத்துகளை அப்படியே I இராஜாக்கள் புஸ்தகத்தில் **பாகால் தெய்வத்துக்கு** பலியிட்ட தீர்க்கதரிசிகளின் செயலோடு வாசித்துப் ஒப்பிட்டு பாருங்கள். பலிபீடத்தின் விறகின்மேல் வைக்கப்பட்ட **மாமிசத்தை, நெருப்பு பற்ற வைக்காமல்** அதை எறிய வையுங்கள் பார்க்கலாம் என்று உண்மை ஊழியனான **எலியா** அவர்களோடு சவால் விடுகிறான். அப்போது **நானூற்றுஜம்பது** பாகாலின் (ஊழியக்காரர்கள்) தீர்க்கதரிசிகள் தங்கள் தெய்வமான பாகாலை அழைத்து நெருப்பில்லாமல் பலி பீடத்தில் வைத்துள்ள **விறகை பற்றவைக்க** பாகாலிடம் வேண்டினார்கள் பதில் இல்லை.!

அப்போது அந்த **நானூற்று ஐம்பது** தீர்க்கதரிசிகளும் அவர்கள் தெய்வமான **பாகாலை** நோக்கி வேண்டிக்கொண்ட அவர்களின் ஆராதனை முறையை பைபிளில் வாசித்துப்பாருங்கள் I இராஜாக்கள் 18:26 அவர்கள் தெய்வமான பாகாலை கூப்பிட **சத்தம்** போட்டார்கள். **கூக்குறலிட்டார்கள்.** பலி பீடத்துக்கு அருகே சென்று **குதித்து ஆடினார்கள்** என்று வேதம் கூறுகிறது.

**இதே ஆட்டத்தைதான்** இன்று அனைத்து **பெந்தேகோஸ்தே** சபைகளிலும் ஆராதனையில் நீங்கள் காணலாம்.

சமீபத்தில் **சேலம் AG சபையில்** வாலிபர்களுக்காகவும் வாலிப பெண்களுக்காகவும் நடத்தப்பட்ட கூட்டத்தில் ஒரு சம்பவம் கேள்விப்பட்டேன். ஆவிக்குரிய வளர்ச்சி அடையாத அந்த வாலிப பிள்ளைகளை வேத அறிவில் வளர்ந்துகொண்டிருக்கும் அந்த இளம் வாலிப பிள்ளைகளை **ஜெப வேளையில் குதிக்க வைத்து, கதற வைத்து** வேடிக்கை பார்த்தார்களே!. இந்த சின்ன வயதிலேயே இப்படிப்பட்ட தவறான அனுபவத்தை அந்த வாலிப பிள்ளைகளின் மூளையில் செலுத்தினால் இவர்கள் இந்த சபையில் **தொடர்ந்து ஆராதிப்பார்களேயானால்** இவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சி **வசனத்தில்** காணப்படாது. **பரவச அனுபவத்தோடு** நின்றுபோகும். அந்த அனுபவமும் அவர்களின் சபை ஆராதனையுடன் நின்றுபோகும்.

இப்படி **போலி பாஷைகளை** பேசுகிறவர்களின் வீட்டில் **சாட்சியிருக்காது**! தொழிலில் **சாட்சியிருக்காது!** பெற்றோர்க்கு பிள்ளைகள் **அடங்க மாட்டார்கள்.** பல பாவ சம்பவங்கள் பாவதொடர்புகள் இவர்கள் வாழ்கையில் நிச்சயம் காணப்படுமே! இதைத்தான் AG சபையின் அடிப்படை தவறான உபதேசம் என்று குறிப்பிடுகிறேன். சபை ஆராதனையில் சபை மக்கள் இடும் **சப்தங்கள்.ஊளைகள், கைதட்டல்கள், கதறல்கள்** யாவும் பாஸ்டர்களையும், சபையில்உள்ள குட்டி பாஸ்டர்களையும்,சபை மக்களையும் ஊக்கப்படுத்துகிறது. அந்த கதறலை அவர்கள் ரசிக்கிறார்கள். வல்லமை வந்துவிட்டதாக அந்த வாலிப உள்ளங்களை நம்ப வைக்கிறார்கள்.

❖ சிலர் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி டாக்டர்.புஷ்பராஜ் ஆகிய நீங்கள் **நக்கலாக, கிண்டலாக** பேசி அவமானப்படுத்திவிட்டீர்கள் என்ற குற்றச்சாட்டை எழுப்பினார்கள். நான் **பரிசுத்தாவியானவரை** நக்கலாக கிண்டலாக **பகடியாக** பேசவில்லையே! அப்படி பேச துணிவேனா? நான்.

பரிசுத்த ஆவியானவர் பெயரில் ஜெபவேளையில் இவர்கள் **கூத்தடிக்கிறார்களே** அதைத்தான் **கிண்டலாக பகடியாக** குறிப்பிட்டேன்.

# பாகாலின் பூசாரிகள் ஆடிய நடனம்:

எலியா **பலிபீடத்தின்முன் குதித்தவர்களை,நடனடமாடியவர்களை** பார்த்து என்ன சொன்னான் வாசித்து பாருங்கள்.

(27ம் வசனம்) மத்தியான வேளையில் எலியா அவர்களை **பரியாசம்** பண்ணி இன்னும் **உரத்த சத்தமாக** கூப்பிடுங்கள் என்றான். பெந்தேகோஸ்தே சபை ஆராதனையிலும் பாஸ்டர்கள் இவ்வாரு கூறுவதை கவனித்திருப்பீரளே! இந்த சப்தம் போதாது! அல்லேலூயா! அல்லேலூயா!! **இன்னும் சத்தம்** இன்னும் கூட அதிக சத்தம் வேண்டும்! இப்படி கூறித்தானே சபை மக்களை கூக்குரலிட வைத்து ஆராதனையை பைத்தியமாக்குகிறார்கள். சில பாஸ்டர்கள் ஆராதனை ஆராதனை என்று சத்தம் போட வைக்கிறார்கள். இப்படி ஆராதனை ஆராதனை என்று கூக்குரலிட்டால் அது ஆராதனை ஆகுமா? என்ன விளையாட்டு இது? எலியா இப்படிப்பட்டவர்களை பார்த்து கூறியது என்ன? உங்கள் தெய்வம் **தியானத்தில் இருப்பான்** அதனால் காது கேட்கவில்லை போலும் ! **இன்னும் சத்தமாக கத்துங்கள்** என்றான். அடுத்து ஒருவேளை உங்கள் தெய்வத்துக்கு **வேலைபளு** அதிகமாக இருக்கும் உங்கள் தெய்வம் **பிஸியாக** இருப்பான். இன்னும் கெஞ்சம் **கத்தி கூப்பிட்டு பாருங்களேன்!** என்றான். அதோடு நிற்கவில்லை ஒரு வேளை உங்கள் தெய்வம் எங்கோ **பிரயாணம்** பண்ணிக்கொண்டிருப்பான். அதனால் உங்கள் சத்தம் அவனுக்கு கேட்கவில்லை!. வெகு தூரம் போகிறவரை கைதட்டி சத்தமாக கூப்பிடுவதைப்போல கூப்பிட்டு பாருங்களேன். இதுதான் எலியா கூறியதின் விவரிப்பு. அடுத்த வார்த்தை தான் மிகவும் தமாஷான வார்த்தை, உங்கள் தெய்வம் ஒருவேளை **தூங்கிக்கொண்டிருப்பான்.** சின்ன சத்தத்துக்கு எழுந்திருக்கமாட்டான்! ஆகவே **இன்னும் கூக்குரலிடுங்கள்** என்று என்னமாய் **எலியா** நக்கலடிக்கிறான் பாருங்கள்.

நாம் ஆராதிக்கும் தெய்வம் **பாகாலை போலவா**? இல்லையே ! யோசித்துப் பாருங்கள். சங். 121:4 இஸ்ரவேளை காக்கிறவர் **உறங்குவதுமில்லை. தூங்குவதுமில்லை.** உன் வலது பக்கத்திலே நிழலாயிருக்கிறார்.

**உறங்குவதில்லை** என்பதற்கு **ஓய்வு எடுப்பதில்லை** என்பதுதான் சரியான மொழியெர்ப்பு. இப்படி கண்மணிபோல் நம்மை காக்கும் நம் தெய்வத்தை ஒழுங்கீனமான முறையில் ஆராதிக்கும் இப்படிப்பட்ட சபையிலிருந்து **மக்களை காப்பாற்ற வேண்டாமா? நடனமாட** சொல்லும் ஊழியர்களிடமிருந்து **நம் வாலிபர்களை** காப்பாற்ற வேண்டாமா?. ஆகவே தான் **நான் சகோ.ஸ்டேன்லி, சகோ.லைனல்.** AG சபை IPC சபைகளின் தவறான உபதேசத்தை விமரிசிக்கிறேன். **பரிசுத்த ஆவியானவரைப்பற்றி** இவர்கள்தான் தவறாக புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். தவறாக என்பதைவிட அப்படிபட்ட ஆரதனையில் பல வருடங்கள் பழகிவிட்டார்கள் என்று கூறுவதுதான் பொருந்தும். அது தவறு என்று இவர்கள் விளங்கிக்கொண்டாலும் அதை நிறுத்துவது இவர்களுக்கு அத்தனை எளிதல்ல!.

❖ **சகல ஜனங்களே, கைக்கொட்டி தேவனுக்கு முன்பாக கெம்பீர சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.** சங் 47, இதுபோல கர்த்தரை உரத்த சத்தமாக கூப்பிடுங்கள். அடக்கிக்கொள்ளாதே.

❖ தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று முன்னிலும் அதிகமாக அவன் கத்தினான். தேவன் அவன் சத்தத்தை கேட்டு குணமாக்கினார். மற்றவர்களோ அவன் சத்தமிடுகிறதை அடக்கினார்கள். இப்படிப்பட்ட வசனங்களை தெரிந்தெடுத்து வேதம் சத்தம்போட்டு ஜெபிக்க சொல்கிறது. ஆகவே நீங்கள் மௌனமாக நிற்காதீர்கள். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சத்தம் போட்டு துதிக்கிறீர்களோ அந்த அளவு பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் இறங்குவார், **அக்கினி அபிஷேகம் இறக்கம்** என்று கூறி **அக்கினி, அக்கினி** அக்கினி என்று ஆராதனை நடத்துகிறவர்கள் சபை மக்களை மூளை சலவை செய்து கதற வைக்கிறார்கள். இவைகள் யாவும் பழைய ஏற்பாட்டு மக்கள் கைக்கொண்டது, புதிய ஏற்பாட்டு சபை ஆராதனை போதிப்பது வேறு. அதனால்தான் சொல்கிறேன். பெந்தேகோஸ்தே சபை உபதேசம் உள்ளவர் யாவரும் பழைய ஏற்பாட்டு கிறிஸ்தவர்கள் என்று குறிப்பிடுவதில் தவறென்ன?

❖ அன்னிய **பாஷையைப்பற்றி** பாஸ்டர் ராஜாமணி . சகோ.**ஸ்டர்னலி, சகோ.லைனல்** ஆகியவர்கள் எழுதிய தவறான வியாக்கியானத்தைபற்றி அவ்வளவு தெளிவாக ஜாமக்காரனில் நான் எழுதியும் சேலம் AG சபை பாஸ்டர்.ராபர்ட் சிங் அவர்கள் 18-9-2016 ஆராதனை அன்று பரிசுத்தாவியானவரிடம் நீங்கள் கேட்கும்போது அவர் அன்னிய பாஷையை நம் வாயில் கொடுக்கிறார். அன்னிய பாஷை என்றால் ஹிந்தி, மராத்தி போன்ற பாஷை அல்ல ! அன்னிய பாஷை உங்களுக்கு கிடைத்தால் உங்கள் ஒருவருக்கும் கோபம் வந்தால் **கெட்டவார்த்தையில்** திட்டமாட்டீர்கள் அது பரிசுத்த வார்த்தையாக மாறும். அதற்குத்தான் பெயர் **அன்னிய பாஷை** என்று கூறினார். இப்படி ஒரு **புது சொந்த வியாக்கியானத்தை** இவர் ஆராதனையில் பேசியதை நானே கேட்டேன்!,

இப்படியெல்லாம் அவரவர் இஷ்டம்போல பிரசங்கித்து வேத வசனத்துக்கு உண்மையான, சரியான விளக்கத்தை கொடுக்காமல், சபை மக்களை இப்படியா குழப்புவது? யாராவது நீங்கள் ஆராதனையில் பிரசங்கித்த இந்த தவறான விளக்கத்துக்கு வேத வசன ஆதாரம் காண்பிக்க முடியுமா? என்று பாஸ்டரை நோக்கி கேட்டார்களா? கேட்க மாட்டார்கள். எல்லா பெந்தேகோஸ்தே மக்கள் நிலையும் இனி அவ்வளவுதான். **வசனத்தில் வளர்ந்து வசனத்தை** தங்கள் வாழ்க்கையில் **சாட்சியின்**மூலம் நடைமுறைபடுத்தும்போது அதனால் **அனுபவிக்கும் விசேஷ இன்பத்தை** இவர்கள் யாரும் ருசிக்க வழியில்லை. இவர்கள் யாரும் இதை சொல்லித்தர மாட்டார்கள்.

❖ இவர்களுக்கு **துதி ஆராதனை** போதும் துதி மட்டுமே இவர்களை **பரலோகத்திற்கு** அழைத்து சென்றுவிடும் என்ற தவறான எண்ணத்தை சபை மக்கள் மனதில் பதிய வைக்கிறார்கள்.

❖ ஒருவர் E-mailல் பெந்தேகோஸ்தே சபையினர் ஜெபத்தில் பேசும் பாஷையை ஆராய்ந்து எழுதியுள்ளார். இவரும் பல வருடங்கள் பெந்தேகோஸ்தே சபையில் ஆராதித்து இப்போது தெளிவு பெற்று அந்த சபையைவிட்டு விலகி தன்னை காப்பாற்றிக்கொண்டவர். அவர்தான் இப்படி எழுதினார். கீழே வாசிக்கும் இந்த வார்த்தைகள்தான் பெரும்பாலும் எல்லா பெந்தேகோஸ்தே சபைகளிலும் கேட்கப்படும் உளரல் சத்தமாகும். இந்த வார்த்தைகளை தவிர வேறு வார்த்தைகள் இவர்களின் **அன்னிய பாஷை** என்று கூறப்படும் **உளரலில்** கேட்க முடியாது.

**சரபல சங்கர பல**
**இரபல தூர்க்கா பல**
**ரிக்கல பல ரிப்பா**
**ஊரிபா ரிவ லிபா**
**ஒரி ப பா பா ம பரஜல தராக்க ரிமா பல சந்திரிகல பாம**
**பௌதி க ர ம பலா**
**ஆலோபாம ஷா மா சத்திரிக்கயாம்**

பெரும்பாலான பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்கள், சபை விசுவாசிகள் யாவரலும் மேலே வாசித்த வார்த்தைகளை போலதான் எல்லாரும் பேசுவார்கள். மேலே குறிப்பிட்ட வார்த்தைகளில் ஏதாவது ஒரு வார்த்தையாவது எல்லா பெந்தேகோஸ்தே சபை பாஸ்டரும்,சபை மக்களும் பேசும் பாஷையில் நீங்கள் நிச்சயம் கேட்கலாம்.

**அன்னிய பாஷை** பேசும் பெரும்பாலானவர்கள் சப்தத்தை கவனித்தால் **சங்கரபல** என்ற வார்த்தை அடிக்கடி கூறுவதைபெரும்பாலும் அனைத்து பெந்தேகோஸ்தே சபைகளிலும் கேட்கலாம். தமாஷாக இல்லை?

இந்த குறிப்பிட்ட 1 கொரி 14:26ம் வசனத்தை பெந்தேகோஸ்தே சபையினர் சுட்டிக்காட்டிதான் **தாங்கள் பேசும் அன்னிய பாஷைக்கு அர்த்தம் தேவை இல்லை.** அர்த்தம் கேட்டக்கூடாது என்று கூறி, இதை வைத்தே தன் சபையினரை எல்லாரும் வாய்க்கு வந்தபடி உளருங்கள். அதுதான் தேவன் தரும் அந்நியபாஷை என்று நம்ப வைக்கிறார்கள். அன்னிய பாஷையில் ஜெபத்தில் பேசுவதால் அது **தேவனோடு பேசுவதாகும்** என்று ஒரு போடு போட்டால் யாரும் எதிர் கேள்வி கேட்கமாட்டார்கள். இதைக்கூறித்தான் சபை மக்களை ஏமாற்றுகிறார்கள். இது தெவ தூஷணமாகும். இதற்கு கிடைக்கும் தண்டனையை பாஸ்டர்கள் உணரவில்லை.

❖ **அன்னியபாஷையை** இவர்கள் சபை மக்களுக்கு சொல்லித் தருகிறதை கவனித்திருக்கிறீர்களா?.

**நாக்கை** தளர்த்திவிடுங்கள், **வாயை மூடிக்கொண்டால் ஆவியானவர் உங்கள் வாயை உபயோகிக்கமாட்டார்.**

**பலரின் நாக்கை பிசாசு கட்டி** வைத்திருக்கிறான். அதனால்தான் **அன்னியபாஷை** உங்கள் வாயிலிருந்து வருவதில்லை. இப்படி கூறினால் பயமுறுத்தினால் ஆராதனையில் உள்ளவர்களில அந்நிய பாஷை பேச தெரியாதவர்கள் வெட்கப்பட்டு நெளிந்து கொண்டிருப்பவார்கள். அப்படிப்பட்டவர்கள்கூட வாயை திறந்து வெறுமனே **ஸ்தோத்திரம்** என்ற வார்த்தையாவது கூறுவார்கள். ஆராதனையில் தங்கள் அருகே நிற்பவர்கள் தங்களைக் குறித்து தவறாக நினைத்துவிடுவார்களோ என்று கூச்சத்தில் **ஸ்தோத்திரம்** மட்டும் கூறுவார்கள்.

இப்படிப்பட்ட காட்சிகள்தான் இன்று அனைத்து **பெந்தேகோஸ்தே சபைகளில்** ஓடிக்கொண்டிருக்கிறது.

# அன்னிய பாஷை

அந்நியபாஷையை பற்றி நான் எழுத துவங்கியபோது ஆரம்பத்தில் இதன் சரித்திர பின்னணியைப்பற்றி நான் எழுதியதை ஞாபகப்படுத்துகிறேன்.

அப். 2ம் அதிகாரத்தில் **முதல்முறை பரிசுத்த ஆவியானவரின் இறக்கத்தில் உண்டான** சம்பவம். அதில் பல்வேறு நாடுகளில் இருந்து, **பல்வேறு பாஷைகள் பேசும் யூதர்கள்** எருசலேம் நகரத்துக்கு வந்து கூடினார்கள் என்றும் இங்கு இந்த யூதர்கள் எப்படி பல்வேறு நாடுகளில் சிதறடிக்கப்பட்டார்கள் என்பதையும் **பாபேல் கோபுரம்** பணியத் தொடங்கிய அக்கால மனிதர்களை கர்த்தர் **பற்பல பாஷைகளை பேசவைத்து அவர்களை சிதறடித்த** சரித்திரத்தையும் குறித்து எழுதியிருந்தேன்.

ஆபிரகாம் காலத்துக்குப் பிறகு **யூதயினம்** தோன்றியது. உலகம் முழுவதும் அவர்கள் சிதறடிக்கப்பட்டது. இப்போது பஸ்கா பண்டிகைக்கு **பல்வேறு பாஷைகள்** பேசும் **யூதர்கள்** எருசலேமிற்கு கூடிவந்த இந்த **சூழ்நிலையில்தான்** இவர்களுக்கு இயேசுதான் **மேசியா** என்பதை அறிவிக்க எருசலேமில் **மேல்அறையில்** காத்திருந்த **சீஷர்கள்**மேல் **பரிசுத்த ஆவியானவர்** முதல் முறையாக இறங்கி அவர்களை நிறைத்தார்.

பற்பல உலக நாடுகளில் சிறகடிக்கப்பட்ட **யூதர்களை** இந்த முழக்க சத்தம் மூலமாக கர்த்தரே அந்த மேல்வீட்டு அறைக்குமுன் கூட்டிச் சேர்த்த விவரமும் அதாவது சீஷர்களின் வாயால் **பற்பல பாஷைகளை** பேச வைத்து அவர்களுக்கு அந்த யூதர்களுக்குள் விசுவாசத்தை வரவழைத்து அவர்கள் இயேசுவை **மேசியவாக** ஏற்றுக்கொள்ள வைத்த அந்த சம்பவ சரித்திரங்களை வரிசையாக விளக்கினேன். நான் விளக்கிய விவரங்களவான:

1. **பற்பல பாஷைகளை** பற்றிய விளக்கம்

2. எபேசு பட்டினத்தில் யோவானின் சீஷர்கள் **அன்னிய பாஷைகளில்** பேசி தீர்க்கதரிசனம் உறைத்த விவரமும் **முக்கியமாக அதன் காரணத்தையும்** விளக்கினேன்.

3. **சமாரியர்களுக்கு** பரிசுத்தாவியின் **நிறைவு**

4. கொர்நெல்லியூஸ் வீட்டார் **பரிசுத்த அவியினா**ல் நிறைக்கப்பட்டு பேசிய அன்னிய பாஷை (**பரவசப் பேச்சு**) ஆகியவற்றின் நோக்கத்தையும் அதன் விளக்கத்தையும் கூறினேன்.

❖ இதுவரை நான் எழுதியதில் வசன அடிப்படையில் உபபேசத்தில் தவறுகள் இருந்தால் தைரியமாக எனக்கு எழுதி அதை சுட்டிக்காட்டலாம் என்று குறிப்பிட்டிருந்தேன்.

**ஆனால் இதுவரை பெந்தேகோஸ்தே சபை தலைவர்களோ, சபை பாஸ்டர்களோ, பெந்தேகோஸ்தே சபை விசுவாசிகளோ வேறு யாரும் எனக்கு அன்னிய பாஷையை குறித்து எந்த விவரங்களும், விமர்சனங்களும் எனக்கு எழுதவில்லை. இதன் அர்த்தம் என்ன? யோசித்து பாருங்கள்.**

## 1 கொரி. 14:2 அன்னிய பாஷை இரகசியம் (Mysteries)

இந்த அதிகாரத்தை முழுவதையும் முறைப்படி தியானிக்காதுபோனால் குழப்பமும் முடிவாக தெளிவு பெறவும் முடியும்.

ஏற்கனவே நான் எழுதியபடி வேதத்தின் எந்த பகுதியை வாசித்தாலும் கவனிக்கவேண்டியது அந்தப்பகுதி எப்போது எழுதப்பட்டது?. யாருக்கு எழுதப்பட்டது? . எந்த சூழ்நிலையில் எழுதப்பட்டது என்பதை விளங்கிக்கொள்ளாமல் வாசித்தால் வசனங்களையும் சம்பவங்களையும் நீங்கள் பிழையாக விளங்கிக்கொள்ள நேரிடும். ஜாக்கிறதை!

புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்ட நிரூபங்கள் யாவும் குறிப்பிட்ட அந்தந்த சபை மக்களிடத்தில் என்னென்ன குறைகளை, தவறுகளை, பாவங்களை, **தவறான உபதேசங்களை** அப்போஸ்தலர்கள் கண்டு அல்லது கேள்விப்பட்டார்களோ அதைவைத்துதான் ஆலோசனைக்காகவும். எச்சரிப்புக்காகவும் நிரூபங்களை எழுதுகிறார்கள்.

அன்னிய பாஷை பிரச்சனை **கொரிந்து சபையில்** மட்டும் தான் இருந்தது. காரணம் 14 பாஷைக்காரர்கள் அந்த சபையின் அங்கத்தினர்களாக இருந்தார்கள். ஆகவே இந்த சபைக்கு மட்டும் **மொழிபெயர்ப்பு** இலலாது போனால் சபைகளின் அன்னிய பாஷை பேசாதே என்று பவுல் ஆலோசனை கூறியிருக்கிறார்.

இப்போது தான் முக்கியமாக நீங்கள் கவனிக்கவேண்டிய பகுதி வருகிறது. இந்த அதிகாரம் முழுவதும் கொரிந்து சபைக்காக மட்டும் எழுதப்பட்ட விஷயம் ஆகும் என்பதை முதலில் நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். மேலும் அனைத்து கிறிஸ்தவ சபைகளுக்கும் இந்த அதிகாரத்தில் கூறப்பட்ட விஷயம் பொருந்தாது என்பதை கவனிக்க வேண்டும். புதிய ஏற்பாட்டு புத்தகத்திலேயே வேறு எந்த ஒரு நிருபத்திலும், எந்த ஒரு சபைக்கும் **அன்னிய பாஷை** என்ற ஒரு வார்த்தை கூட எழுதப்படவில்லை என்பதை கவனிக்கவேண்டும். அந்நியபாஷை சபைக்கு முக்கியமானால் அதைத்து சபைக்கும் நிருபம் எழுதும்போது சீஷர்கள் குறிப்பிட்டிருப்பார்களே?

கிறிஸ்து **பிறந்து, மரித்து, உயிர்த்து** பரமேரியப்பின் சுமார் 56 வருடங்களுக்கு பிறகு இந்த நிரூபம் எழுத்தப்பட்டது. அந்த காலகட்டத்தில் வேத புஸ்தகம் திருச்சபைக்கு எழுதிக் கொடுக்கப்படவில்லை. நியாயபிரமானம் அடங்கிய பழைய ஏற்பாட்டு புஸ்தகம் மட்டுமே யூதர்களிடம் இருந்தது.

யூதர்அல்லாத விதவிதமான விக்கிரகங்களை வணங்கிவந்த வித்தியாசமான பலவித கலாச்சார பழக்கவழக்கங்கள் நிறைந்த **பல பாஷைகளை** பேசும் மக்கள் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டபின் கொரிந்து பட்டிண சபையில் இணைந்தார்கள் அதனால் அவர்கள் பழுகிவந்த **கலாச்சார வழக்கங்கள்** கொரிந்து சபையில் ஆராதனையின் யூத கலச்சார ஒருங்குகளை சீர்குலைக்க செய்தன. ஆகவே அவைகளை சரிப்படுத்த வேண்டி மாத்திரம் பவுல் இந்த நிரூபத்தை எழுதினார்.

❖ கொரிந்து சபையில் மட்டும் 3 விதமாக அந்நியபாஷைகளை பேசி கொண்டிருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

1. தேவனால் தீர்க்கதரிசன செய்திகளை கூற (பரிசாக) வரமாக கொடுக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்ட அன்னிய பாஷைகள் (**அது வரமாக** கர்த்தரால் பயன்படுத்தப்பட்டது). வேதபுத்தகம் எழுதப்படாத காலத்தில் அன்றைய கிறிஸ்தவ சபைகளுக்கு கொடுக்கப்பட்டது.

2. **பரவசப் பேச்சுகள்** (Ectasy)

3. **பாஷைகளைபோல** உள்ள **போலி பாஷைகள்**

இந்த **போலி பாஷைகளைத்தான்** இப்போது அனைத்து பெந்தேகோஸ்தே சபைகளிலும் பாஸ்டரும் - சபை மக்களும் பேசிக்கொண்டிருப்பதை காண்கிறோம்.

இவைகளில் **சரியானது**? எது ஆவியானவரால் **வரமாக** கொடுக்கப்படுவது எது? என்பதை இனம் கண்டுபிடித்து **வரங்களை கொரிந்து சபையினர்** ஒழுங்காக பயன்படுத்தாததால் சரியான ஒழுங்குக்கு கொரிந்து சபையை கொண்டுவருதற்காக எழுதப்பட்டதுதான் **கொரிந்து நிருபம்.**

❖ 1 கொரி 14ம் அதிகாரம் முழுவதிலும் **வரங்களைப்பற்றி** தெளிவாக அறிய முக்கிய விவரங்களை பவுல் எழுதுகிறார்.

இதில் **பாஷை** என்ற பதத்தை **ஒருமையிலும் மற்றும் பாஷைகள்** என்று பன்மையிலும் குறிப்பிடப்பட்டுள்ளதை கவனிக்கவேண்டும்.

மூல பாஷையில் ( Glossa பாஷையில் **ஒருமை** பாஷை) Glossai பாஷைகள் **பன்மை**

வேதத்தில் **9 வரங்களை மட்டும்** பிரதானமாக பவுல் குறிப்பிட்டுள்ளார். ஆனால் **வரங்கள்** 21க்குமேல் உண்டு என்று வேதத்தில் நாம் அறியலாம். இதில் **கடைசி வரம்தான் அன்னிய பாஷை** வரம் ஆகும்.

புதிய ஏற்பாட்டு வேத புஸ்தகம் எழுதப்படாததற்குமுன் உள்ள கிறிஸ்தவ சபையில் **அன்னிய பாஷை** வரம் இரண்டு விதமாக செயல்பட்டது

1. சபை **மக்களோடு கர்த்தர் பேச** அன்னிய பாஷை வரத்தை பயன்படுத்தினார்.

2. ஜெபத்தின்மூலம் தீர்க்கதரிசனம் அதாவது கர்த்தரின் வாரத்தைகளின் கர்த்தரின் விவரிக்க முடியாத (Mysteries)வைகளை அனுபவமாக உணர்ந்து அவரவர்கள் ஜெபத்தில் பேச **அந்நியபாஷை வரத்தைப்** பயன்படுத்தினார்.

ஆங்கில வேதாகமத்தில் K.J.Vயில் **பாஷை** என்று வருகிற பகுதிகளில் Unknown Tongues) என்று மொழிபெயர்த்துள்ளார்கள். குறிப்பிட்ட இந்த வார்த்தை எழுதப்பட்ட இடங்களிலெல்லாம் Italics அதாவது **சரிந்த** எழுத்துக்களில் குறிப்பிட்டிருக்கிறது. அதன் அர்த்தம் அந்த குறிப்பிட்ட வார்த்தை **மூல பாஷையில் இல்லை** என்பதாகும் ஆரம்பத்தில் வேதத்தை மொழி பெயர்த்தவர்கள் அதை சேர்த்திருக்கிறார்கள் என்று அர்த்தம் கொள்ளலாம். இப்போது இந்த 14ம் அதிகாரத்தை அப்படியே கற்பனையில் கொண்டு வாருங்கள் 14 **பாஷைகாரர்கள்** நிறைந்த சபையில் ஆராதனை நடந்து கொண்டிருக்கிறது. துதித்தல் வேளை முடிந்து பிரசங்க நேரம் வருகிறது .

**பேதுருவோ, பவுலோ பிரசங்கிக்கிறார்கள். என்ன பாஷையில் பேசியிருப்பார்கள் எல்லாரும் அறிந்த கிரேக்க மொழியில் பிரசங்கித்திருக்க வேண்டும். ஆகவே மொழி பெயர்ப்பு தேவையில்லாமல்போனாது.**

❖ அவரவர் **தாய் மொழியில்** ஜெபம் ஏறெடுக்கும்போது சபையில் அவர் அருகே இருக்கும் ஒரு நபர் ஜெபிப்பவரின் தாய் பாஷையை மற்றவர் கவனிக்கிறார். அருகே ஜெபித்த அந்த நபரின் பாஷை அவருக்கு அது அன்னிய பாஷை ஆகும். ஆகவே அந்த நபர் ஜெபிப்பது **இவருக்கு விளங்கவில்லை.** இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் பவுல் 1 கொரி. 14:2ல் கூறுகிறார். அந்த ஜெபவேளையில் ஒருவன் ஆவியானவரால் உணர்த்தப்பட்டு ஜெபிக்கும்போது அவனுடைய தனிப்பட்ட இரகசியங்களை அல்லது தேவன் அவனோடு உணர்த்திய Mysteriesஐ மற்றவர்கள் **அறிந்துகொள்ளக்கூடாது** என்று தான் அவன்தன் **தாய்மொழியில்** கர்த்தரிடம் மனம் விட்டு பேசுகிறான். சபையில் இருக்கும் மற்றவர்கள் அவன் ஜெபிக்கும் தாய் பாஷையின் அர்த்தம் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அதனால் பவுல் கூறுகிறார். அவன் பேசுவது பிரசங்கம் அல்ல. பிரசங்கத்துக்கு மொழிபெயர்ப்பு தேவை. அவரவர் செய்யும் ஜெபத்துக்கு மொழிபெயர்ப்பு தேவையில்லை. மற்றவர்களுக்கு அதன் அர்த்தம் புரிய வேண்டிய அவசியமும் இல்லை. காரணம் அவன் தேவனிடத்தில் பேசுகிறான்.(ஜெபிக்கிறான்) என்கிறார். அவன் மற்றவர் அறியக்கூடாத தன்னுடைய தனிப்பட்ட இரகசியங்களைத்தான் அல்லது அவனுக்குமட்டும் வெளிப்படுத்த தேவன் செய்த Mysteries நினைத்து புகழ்ந்து தேவனிடம் பேசுகிறான். அதற்கு மொழிபெயர்ப்பு தேவையில்லை. இதைத்தான் இப்போது **பெந்தேகோஸ்தே சபையினர் பேசும் அந்நியபாஷையோடு ஒப்பிடுகிறார்கள்.** இது அபத்தமாகும்.

❖ சபையின் ஜெபவேளை சூழ்நிலையில் சொல்லப்பட்ட வசனம் தான் 1 கொ. 14:2 ஆகும். சபை ஆராதனையில் ஜெப வேளையில் ஜெபிக்கும் தனி ஜெப வாழ்க்கையும் அவனுக்கு **பக்தி விருத்தியை** உண்டாக்கி, தேவனோடு ஜெபத்தின் மூலம் நெருக்கத்தை உண்டாக்கும். **பக்தி விருத்தி வசனத்தின் மூலமாக மட்டுமே விருத்தியாகும்** அதோடு வசனத்தை புரிந்துகொண்டவன் ஜெபிக்க தொடங்குவான். இப்படி வசனம் - ஜெபம் ஆகிய இவற்றின் மூலமாக மட்டுமே **பக்தி விருத்தியாகும்.**

அடுத்து பவுல் கூறுவதை கவனியுங்கள். 5ம் வசனம் நீங்கள் எல்லாரும் **அன்னிய பாஷை** பேசும்படி விரும்புகிறேன் என்கிறார். மறுபடியும் வாசகர்களை ஞாபகப்படுத்துகிறேன். இதில் கவனிக்கவேண்டிய விஷயம் பவுல் கூறும் **அன்னிய பாஷை** ஆலோசனை.

**கொரிந்து சபைக்கு** மட்டும்தான் பொருந்தும் சபையில் உள்ள எல்லோரும் அன்னிய பாஷை பேசும்படி பவுல் விரும்புவதாக கூறுவதின் காரணம் என்ன? மற்றவர்களின் பாஷையை பழகிக்கொண்டால் மற்றவர்களோடு (Fellowship) ஐக்கியம் உண்டாகும். அப்போதுதான் சபை ஒருமனதோடு **அன்யோன்யத்தோடு** செயல்பட முடியும் என்று அர்த்தம் கொள்ளலாம்.

❖ **பிரசங்கம் முடிந்தது. இப்போது ஜெப நேரம் சபை** மக்கள் அனைவரும் பிரசங்கத்தில் உணர்த்தப்பட்ட விஷயங்களுக்காகவும் மற்ற விஷயங்களுக்காகவும் ஜெபிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

**ஜெபம் என்பது தேவனோடு பேசுவது.** சபை மக்கள் தேவனோடு பேசும்போது அவரவர் **தாய்மொழியில்** பேசுவதுதானே இயல்பு. அதுதானே அனைவருக்கும் சுலபமாக எளிதாக கர்த்தரிடம் பேசக்கூடியது. இப்படியிருக்க இன்றைய பெந்தேகோஸ்தே சபைகளில் அன்னிய பாஷையில் ஜெபிக்கிறேன் என்று கூறி **சக்ரஹீ பக்ர-சங்கர- பல** என்ற வார்த்தைகளையே திரும்ப திரும்ப கூறினால் அது பாஷை ஆகுமா? நன்றாக பரிசோதித்து உணருங்கள். நீங்கள் மேலே கூறப்படுவதுபோல் இரண்டுவித உளரல்கள் அல்லது வேறு வார்த்தைகள் உங்கள் யாவிலிருந்து வந்ததுண்டா? உங்கள் மனைவி,பிள்ளைகளை கேட்டுப்பாருங்கள். அல்லது மொபைலில் பதிவுசெய்து மறுபடியும் போட்டு கேட்டுப்பாருங்கள். உங்களை நீங்களே இத்தனை வருடமாக அந்நியபாஷை என்ற பெயரில் ஏமாற்றிக்கொண்டது விளங்கும். கொஞ்ஜம் யோசியுங்கள்.

அன்பான என் பெந்தேகோஸ்தே சபை வாசகர்களே, உங்கள் தாய் மொழியில் ஜெபிப்பதுபோல **இன்பம் திருப்தி வேறு எதிலும் கிடைக்காது.** கர்த்தருக்கு எல்லா பாஷையும் தெரியும்!.என்பதை நீங்களாவது உணர்ந்து பாஷை பேசுவதை அடக்கிக்கொள்ளுங்கள்.

**6வது வசனத்தை** வாசித்து பாருங்கள். பவுலாகிய நான் உங்களுக்கு **பிரசங்கம் செய்ய** வசனத்தின் **இரகசியங்களை** வெளிப்படுத்த **தீர்க்கதரிசன விளக்கங்களை கூற உபதேசம்** செய்ய உங்களுக்கு தெரிந்த பாஷையில் நான் பேசாமல் உங்களுக்கு விளங்காத **என் சொந்த பாஷையில்** (அதாவது என் பாஷை உங்களுக்கு அன்னிய பாஷை ஆகும்.) பேசினால் என்ன பிரயோஜனம்? என் பாஷையில் பிரசங்க செய்தியை நான் தயார்படுத்தி **எடுத்துக்கொண்டு நான்** உங்களிடம் வந்தால் உங்களுக்கு என்ன பிரயோஜனம்? என்கிறார்.

சரி, இனி கீழே உள்ள வசனத்தை படியுங்கள்

1 கொரி 14:8-11 அந்தப்படி **எக்காளமும் விளங்காத சத்தமிட்டால்,** எவன் யுத்தத்திறகு ஆயத்தம் பண்ணவான்? அதுபோல

நீங்களும் **தெளிவான பேச்சை நாவினால் பேசாவிட்டால்** பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்களாயிருப்பீர்களே!

உலகத்திலே **எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது.** அவைகளில் ஒன்றும் அரத்தமில்லாததல்ல.

ஆயினும் **பாஷைகளின் அர்த்தத்தை நான் அறியாமலிருந்தால் பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேன். பேசுகிறவனும் எனக்கு அந்நியனாயிருப்பான்.**

இத்தனை தெளிவாக விளக்கமாக பவுல் கூறினாலும் இன்றைய பெந்தேகோஸ்தே சபையினர் பிடிவாதமாக உளரிக்கொண்டு அதை ஜெபம் என்ற பொயில் கர்த்தரே எங்களைப்பேச வைக்கிறார் என்று கர்த்தர்மேல் பழியை போடுகிறார்கள். இது ஆவியானவருக்கு விரோதமாக பேசுவதாகும். ஜாக்கிறதை!. **(அந்நியபாஷை குழப்பம் கட்டுரை தொடரும்........)**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# மிஷனரி உண்டியல் ஜாக்கிறதை?

சில மிஷனரி ஸ்தாபனங்களில் காணிக்கை சேகரிக்க வீடுகள்தோரும் உண்டியல் விநியோகிக்கிறார்கள். அப்படி கொடுக்கப்பட்ட **உண்டியல்களை** வீடுகளுக்கு வந்து சேகரிக்கும் நபர்கள் அந்த **உண்டியல்** பணத்திலிருந்து கொஞ்சம் பணம் **தங்களுக்காக** எடுத்துக் கொள்கின்றனர். சுமார் 11 ஊர்களில் உண்டியலிருந்து பெரிய தொகை திருடப்பட்ட சம்பவம் குறிப்பிட்ட **இரண்டு மிஷனரி** ஸ்தாபனங்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு **உண்டியல் சேகரித்தவர்களை** தங்கள் ஸ்தாபனத்திலிருந்து நீக்கியுள்ளனர். ஆனால் அவர்கள் திருடி எடுத்த பணத்தை அவர்களிடமிருந்து திரும்பபெற எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை !

ஜெப பாரத்தோடு உண்மையாய் **உண்டியல்களை** வீடுவீடாக சேகரிப்பது. மிஷனரி ஊழியத்துக்கு **மாத காணிக்கைகளை** வசூலிப்பது இப்படிப்பட்ட வேலைகளை உயர்ந்த உத்தியோகத்திலுள்ள **மெத்தப்படித்த** நபர்கள் சில மிஷனரி ஸ்தாபனங்களில் அதை ஊழியமாக செய்கிறார்கள். தங்கள் வேலை நேரம் போக தினசரி **மாலை நேரத்தில்** இவர்கள் தன் குடும்பத்துக்குகூட நேரம் ஒதுக்காமல் மிஷனரி ஊழியத்துக்காக **உண்டியல்** சேகரிப்பது, மிஷனரி ஊழிய **மாத சந்தா. காணிக்கை** ஆகியவைகளை வசூலிப்பது இப்படிப்பட்ட பணிகளை, **ஊழியத்தின்** ஒரு பாகமாக ஜெப சிந்தையுடன் செய்யும் நபர்கள் **ஏராளமானவர்களை** நான் அறிவேன். இப்படிப்பட்ட ஊழியத்தில் அவர்கள் தங்கள் நேரங்களை மிகவும் தியாகம் செய்கிறார்கள். மேலும் அவர்கள் சந்திக்கும் வீடுகளில் அந்த குடும்பத்தினருக்காக அவர்கள் ஜெபித்து கர்த்தரின் வசனத்தை அந்த குடும்பத்தினரோடு பகிர்ந்துகொண்டு, ஊழிய பாரத்தோடு செயல்படும் இப்படிப்பட்ட **நல்ல ஆவிக்குறிய நபர்களின்** பெயர்களை கெடுக்கும் வண்ணமாக ஒரு சிலர் மக்கள் ஜெபித்து கொடுக்கும் காணிக்கையிலிருந்து **பணம் திருடி அந்த பணத்தில் சொந்த நிலம்,வீடு, வாகனம்** ஆகியவற்றை வாங்கும் அளவு **தேவபயம்** அற்றவர்களாக செயல்பட்டனர். அவர்கள் **பணம் சேமித்த விவரத்தை** நான் கேள்விப்பட்டு மிகவும் வருந்தினேன். அப்படி உண்டியல் பணம் திருடிய நபர்களின் பெயர்களையும் அவர்கள் சார்ந்த மிஷனரி ஸ்தாபனங்களின் பெயர்களையும் நான் அறிவிக்க விரும்பவில்லை. இவைகளை நான் ஜாமக்காரனில் வெளியிட்டால் **மிஷனரி ஊழியத்துக்கு வளமையாக காணிக்கை** கொடுக்கும் நபர்கள் மிஷனரி ஸ்தாபனத்தை சந்தேகப்படுவார்கள். காணிக்கை சேகரிக்கும் யாவரும் இப்படித்தான் திருடுவார்கள் என்று எல்லாரையும் சந்தேகப்பட்டால் விசுவாசிகள் காணிக்கை கொடுப்பதையே நிறுத்திவிடுவார்களே!. அதனால் மிஷனரிகள் பட்டினிகிடக்க நேரிடும். அதோடு மிஷனரிகளை பணிதளத்துக்கு அனுப்புவதும் நின்று போகும்.

பாரத தேசத்தின் இப்போதுள்ள இக்கட்டான சூழ்நிலையில் **மிஷனரி ஊழியம்**, **சுவிசேஷம்** அறிவிப்பது யாவும் **ஸ்தம்பித்துவிடுமே!** என்று கடந்த 10 வருடங்களாக இவைகளைக் குறித்து நான் எழுத தயங்கினேன். ஆனால் கடந்த இரண்டு வருடமாக **உண்டியல்** திருட்டு மிஷனரி ஊழிய காணிக்கைகளை களவாடுவது **பெருக ஆரம்பித்ததை** அறிந்தபின் **அனைத்து மிஷனரி ஸ்தாபனங்களும்** அறியும் வண்ணம் அவர்களை எச்சரிக்க இதை வெளியிடுகிறேன்.

## மிஷனரி ஸ்தாபனம் செய்ய வேண்டியது என்ன?

வீடுகளில் உண்டியல்களை சேகரித்தவர்கள், அவர்கள் எந்த மிஷனரி ஸ்தாபனத்தை சேர்ந்தவர்கள் ஆனாலும் அல்லது CSI லூத்தரன் சபைகளில் உள்ளவர்களானாலும் அந்த உண்டியலை கொடுத்த குடும்பத்துக்கு, அவர்கள் **கொடுத்த உண்டியலில்** எவ்வளவு பணம் இருந்தது என்பதை ஒரு ரசீதில் குறிப்பிட்டு அந்தந்த குடும்பத்தினருக்கு அறிவிக்க வேண்டும். உண்டியல் கொடுத்த குடும்பத்தினருக்கு தாங்கள் எவ்வளவு பணம் அதில் சேமித்து வைத்திருப்போம் என்று ஓரளவு தோராயமாக அறிவார்கள். அதை அறியும் போதே நாம் உண்டியலில் போட்ட பணம் சரியாக ஸ்தாபனத்துக்கு போய் சேர்ந்துள்ளதா? என்று அறிய முடியும்.

TWR (Trans World Radio) **மிஷனரி** ஸ்தாபனத்தினர், TWR **வானொலி ஊழிய** ஸ்தாபனத்தினர் செய்வதுபோல, **எந்த வீட்டில் உண்டியல் வாங்கினார்களோ** அந்த வீட்டிலேயே அந்த வீட்டார் **முன்னிலையில்** உண்டியலை திறந்து அல்லது மண் உண்டியலாக இருந்தால் அதை உடைத்து, அதில் உள்ள பணத்தை மொத்தம் எவ்வளவு என்பதை அந்த **குடும்பத்தினர் பார்வையில் எண்ணி** கணக்கிட்டு அதை ரசீதில் குறிப்பிட்டு அவர்கள் கையில் கொடுத்து அந்த காணிக்கைக்காக அதை சேகரிக்கும் அந்த நபர்கள் ஜெபித்து வருகின்றனர். இது எல்லா ஊர்களிலும் இப்படி நடக்கிறதா என்பதை நான் அறியேன்.

இப்படி செய்தால் காணிக்கை கொடுத்தவருக்கு **மனத் திருப்தியும்,** உண்டியல் பணம் சேகரித்தவருக்கு **குற்ற உணர்வு** உண்டாகமலிருக்கவும், மேலும் அவர்களுக்கு **தவறு செய்யும் எண்ணம்** உண்டாகாமல் இருக்கவும் இந்த நல்ல ஏற்பாடு உதவுகிறது.

ஆனால் ஆயிரக்கணக்கில் உண்டியல் சேகரிக்கும் **பெரிய மிஷனரி ஸ்தாபன** ஊழியர்களுக்கு இந்த ஏற்பாடு மிகவும் சிரமமான விஷயமாகும். மேலும் ஒவ்வொரு வீட்டிலும் உண்டியலில் உள்ள பணத்தை எண்ணி அவர்களுக்கு அறிவித்து ரசீது கொடுப்பது என்பது, நேரம் மிகவும் வீணாகும்.

எப்படியானாலும் காணிக்கை கொடுத்தவருக்கும் உண்டியல் கொடுத்தவருக்கும் **சேமித்த தொகை** எவ்வளவு, **கொடுத்த காணிக்கை** எவ்வளவு என்பதற்கு ஒவ்வொரு வீட்டாருக்கும் அதற்கான ரசீதை தபாலிலோ, அல்லது அடுத்த முறை உண்டியல் கொடுக்கும்போதோ அவர்களிடம் சமர்ப்பிப்பது நல்லது.

ஒரு சிலர் செய்யும் **இப்படிப்பட்ட உண்டியல் திருட்டு** செயலால் **நல்ல ஸ்தாபனங்களுக்கும்** கெட்ட பெயர் உண்டாகிவிடும் அபாயம் உண்டு.

மிஷனரி ஸ்தாபனத்தினர் காணிக்கை பணம் சேகரிக்க தாங்கள் அனுப்பும் நபரின் ஆவிக்குறிய ஜீவியத்தைக்குறித்து நன்றாக அறிந்திருக்கவேண்டும். **வீடுகளுக்கு அனுப்பும் நபர்கள் உண்மையுள்ள ஆவிக்குறியவர்களாகவும் மிஷனரி பாரம்** உள்ள நபர்களாகவும் தெரிந்தெடுத்து இந்த முக்கிய ஊழியத்துக்கு காணிக்கை சேகரிக்கும் பணிக்கு அனுப்பவேண்டும். குறிப்பாக **ஜெபிக்கும் நபர்களைதான்** அனுப்ப வேண்டும்.

# விசுவாசிகளின் பொறுப்பு

☐ மிஷனரி பணிக்கு பணம் சேகரிக்க ஒரு நபரை ஏற்பாடு செய்து அவர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மிஷனரி பணிகளுக்காக பணம் சேகரிப்பதைவிட **அந்தந்த குடும்பத்தினரே** தாங்கள் விரும்பும் **மிஷனரி** ஸ்தாபனத்துக்கு சிரம்மம் பாராது அவர்களின் அலுவலகத்திற்கு நேரிடையாகவோ, **மணி ஆர்டர்** (MO) மூலமாகவோ, **காசோலை** மூலமாகவோ **Online** மூலமாகவோ அவர்களே தங்கள் **காணிக்கைகளை** அனுப்பும்போது காணிக்கை அனுப்பும் அவர்களுக்கே உள்ளத்திலே வித்தியாசமான திருப்தியும், ஊழியத்துக்காக **காணிக்கை அனுப்பிய சந்தோஷமும்** உண்டாகும்.

ஒரு உண்மையான ஊழியத்துக்கு காணிக்கை அனுப்ப ஒருவர் **முயற்சிக்கும்போது** அதற்காக அவர் எடுத்துக்கொள்ளும் **சிரத்தை** அல்லது **முயற்சி** மூலம் அவர்கள் தங்கள் மனதின்உள்ளே **கர்த்தருக்கு கொடுக்கிறோம்** என்ற உணர்வு பெருகும். மணிஆர்டர் செய்ய முயலும்போது **மணி ஆர்டர் பாரம்** வாங்கி அதை **பூர்த்தி செய்ய** பேனா எடுத்து **விலாசம். பணம்** ஆகியவைகளை அதில் குறிப்பிட்டு எழுதி அதை எடுத்துக்கொண்டு **போஸ்ட்ஆபீஸ்** சென்று **கியூவில் நின்று** அந்த **காணிக்கை பணத்தை** ஒப்படைத்து ரசீது வாங்கி வீடு திரும்பும்போது அவர்களின் உள்உணர்வில் ஏற்படும் **நன்றி உணர்ச்சிகளை** கர்த்தர் அணுஅணுவாக கவனித்து ரசிப்பார், சந்தோஷப்படுவார் என்பதை என் வாழ்க்கையில் காணிக்கை அனுப்பிய என் அனுபவத்தின் மூலமாக உணர்ந்தவன் நான்.

1964ம் வருடம் முதல் என் டாக்டர் தொழிலை நிறுத்தின 1976ம் வருடம் வரை மாதா மாதம் அல்லது அடிக்கடி மணி ஆர்டர்களை பூர்த்தி செய்து போஸ்ட் ஆபீஸில் பணத்தையும் ஒப்படைத்து, **ரசீது** போட்டுவையுங்கள் மாலை நேரம் மொத்தமாக வாங்கிக் கொள்கிறேன் என்று கூறிவிடுவேன். சில சமயங்களில் இரண்டு வெவ்வேறு போஸ்ட் ஆபீஸ்களில் மணி ஆர்டர்களை பிரித்துகொடுத்து மணிஆர்டர் வாங்கும் தபால் துறை அலுவலர்களின் வேலை பளுவை குறைப்பேன்.

எந்தெந்த ஊழிய ஸ்தாபனங்கள் **வெளி நாட்டு பணம்** பெறுகிறார்கள் என்பதைகேட்டு அறிந்து அந்த ஸ்தாபனத்துக்கு காணிக்கை அனுப்புவதை நிறுத்தி, தேவையுள்ள ஊழியங்கள் எது, தேவையுள்ள ஊழியர்கள் யார்? அவர்கள் உண்மையான ஊழியத்தைதான் செய்கிறார்களா என்பதை கேட்டு அறிந்து, அந்த குறிப்பிட்ட ஊழியர்கள் என்னிடம் நேரிடையாக காணிக்கை கேட்காவிட்டாலும், **நானாக** அவர்களுக்கு காணிக்கை அனுப்புவேன். சில ஊழியர்கள் தவறான உபதேசத்துக்குள் போய்விட்டார்கள் என்று அறிந்தால் அவர்களுக்கு கடிதம் எழுதி, நான் காணிக்கையை அவர்களுக்கு அனுப்புதை நிறுத்தும் காரணத்தை அவர்களுக்கு அறிவித்து அவர்களுக்கு பணம் அனுப்புவதை நிறுத்திவிடுவேன். நீதி 3:27 **செய்யதக்கவர்களுக்கு செய்யுங்கள்** என்று வேதம் கூறுகிறது.

இப்படி ஊழிய தேவைகளை அறிந்து சரியான ஊழியங்களை தெரிந்தெடுத்து தாங்குங்கள். **தமது நாமத்திற்காக காண்பித்த அன்புள்ள பிரயாசத்தை மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே** (அதாவது நீங்கள் காணிக்கை கொடுக்க முயற்சிக்கும் பிரயாசங்களை கர்த்தர் கவனிக்கிறார். அதை அவர் மறக்கமாட்டார் என்று அர்த்தம் கொள்ளலாம்.)

# மிஷனரி ஸ்தாபனங்களில் நடக்கும் மற்றொரு ஊழல்

# ( PF பிராவிடண்ட் பண்டில் நடக்கும் ஊழல்)

பெரும்பாலான **மிஷனரி** ஸ்தாபனங்களில் அவர்கள் ஊழியம் செய்யும் மிஷனரிகளுக்கு அல்லது ஊழியர்களுக்கு கொடுக்கும் சம்பளத்திலிருந்து சிறு பகுதியை பிடித்தம் செய்து-பிடித்தம் செய்த **அதே அளவு பணத்தை** அந்த **மிஷனரி அந்த ஸ்தாபனத்தினர்** தங்கள் சார்பாக அந்த **ஊழியர் பெயரில்** (Bank) **வங்கியில்** சேமித்து வைப்பதற்கு பெயர்தான் PF **பிராவிடண்ட் பண்ட்** என்பது . இந்த பணம் மாதக்கணக்கில் வங்கியில் சேமிக்கும்போது **வங்கி** அந்த **தொகைக்கு** வட்டியும் கொடுக்கும், இவைகலெல்லாம் சேர்த்தால் பெரும் தொகையாக சேர்ந்துவிடும். அந்த **மிஷனரி** அல்லது ஊழியர் **ஓய்வு பெரும்போது** அந்த பெருந்தொகை பணத்தை ஓய்வு பெறும் ஊழியரிடம் ஒப்படைப்பார்கள். அந்த மிஷனரி ஓய்வு பெற்றாலும் தனக்கு கிடைத்த **PF பணத்தை** அந்த பெரும் தொகையை அவர் மறுபடியும் வங்கியில் செலுத்திவிட்டால் அதிலிருந்து வரும் **வட்டி தொகையை** பென்ஷன்போல அந்த ஊழியர் **மாதா மாதம்** பெற்று **பட்டினியில்லாமல்** தன் **எஞ்ஜிய வாழ் நாட்களை** கழிக்கமுடியும். அவர்கள் நிம்மதியுடன் வாழ்ந்து தான் பெற்ற பிள்ளைகளிடம் **கை ஏந்தாமல்** சொந்த காலில் நின்று தங்கள் எஞ்ஜிய வாழ்க்கையை வறுமையில்லாமல் நடத்த முடியும்.

இவ்வளவு முக்கியமான இந்த **PF பண விஷயத்தில்** பல மிஷனரி ஸ்தாபனங்களும், அங்கீகாரம் பெற்ற பெரிய ஊழிய ஸ்தாபனங்களும் தங்கள் ஸ்தாபனத்தில் பல வருடம் ஊழியம் நிறைவேற்றிய **மிஷனரிகளுக்கு அல்லது ஊழியருக்கு** ஓய்வு பெரும் நாளில் அவர்களின் PF பணத்தை கொடுப்பதில்லை. வயது முதிர்ந்த அந்த ஊழியர்கள் அந்த பணத்தை பெற அந்த ஸ்தாபனத்தில் உள்ளவர்கள் அவர்களை அலைய வைப்பார்கள். காரணம் அந்த ஊழியர்களின் சம்பளத்தில் **ஒவ்வொரு மாதமும் பிடித்தம்** செய்யும் தொகையை அந்தந்த மாதம் ஸ்தாபனத்தின் பொறுப்பாளர்கள் ஊழியர் பெயரில் **வங்கியில் செலுத்தாமல்,** அந்த பணத்தை ஸ்தாபனத்தின் **வேறு காரியங்களுக்கு** செலவு செய்துவிடுகிறார்கள், சில ஸ்தாபனத்தில் நிர்வாக பொறுப்பில் உள்ள சிலர், மிஷனரிகளின் அந்த பணத்தை அவர்களின் சொந்த காரியங்களுக்கு செலவு செய்துவிடுகின்றனர். சிலர் மிஷனரிகளின் **சேமிப்பு பணத்தை** வட்டிக்கு கொடுத்து பண லேவாதேவி செய்வதை நான் அறிவேன். அதனால் ஓய்வு பெற்ற **மிஷனரி** அல்லது ஊழியர் PF பணம் வாங்க அலையாய் அலைகின்றனர். இதை கண்கூடாக கண்டவன் நான். அந்த ஸ்தாபனத்துக்கு கன்டன கடிதம் எழுதியும் இருக்கிறேன்.

# கிரிமினல் குற்றம்:

ஓய்வுபெற்ற பல ஊழியர்கள், மிஷனரிகள் **PF பணம் கிடைக்காததால் அது விஷயமாக** எனக்கு அவர்கள் எழுதிய கண்ணீர் கடிதங்களே சாட்சி. PF பணம் கேட்டு மிஷனரிகள் **நீதிமன்றம்** சென்றால் PF பணம் **வங்கியில்** செலுத்தாத **ஸ்தாபன தலைவர்களை**, அல்லது **பொருப்பில் உள்ளவர்களை** உடனே **சிறையில்** அடைத்துவிடுவார்கள். PF பிரச்சனை **கிரிமினல்** வழக்காக மாறிவிடும் ஜாக்கிறதை!

மிஷனரி ஸ்தாபனத்துக்கோ ஊழிய ஸ்தாபனத்துக்கோ கெட்ட பெயர் வந்துவிடக்கூடாதே என்று போலீஸ்க்கோ, நீதிமன்றத்துக்கோ போகாமல் இருக்கும் நல்ல எண்ணம் கொண்ட ஊழியர்களையும் நான் அறிவேன்.

மிஷனரி ஸ்தாபன **தலைவர்கள்**, ஊழிய ஸ்தாபன **தலைவர்கள்** மிஷனரி ஊழிய கன்வென்ஷன் கூட்டங்களில் பிரசங்கிக்கும்போது மிஷனரி ஊழியத்தை தாங்குங்கள், **மிஷனரிகளை** அனுப்ப உதவுங்கள்.

பாரதம் இயேசுவை அறிய வேண்டுமே என்று **முதலை கண்ணீரை பிரசங்க நேரத்தில்** வடிக்கின்றனர்.

ஆனால் தங்கள் ஸ்தாபனத்தில் உழைத்த மிஷனரிகள் ஓய்வுபெற்ற நாட்களில் தங்களுக்கு கிடைக்கவேண்டிய PF பணம் கிடைக்காததால் வறுமையில் மிஷனரிகள் வடிக்கும் **உண்மை கண்ணீர்** அவர்கள் மனதை தொடுவதில்லை! அது **மாய மாலம்** அல்லவா? இது ஊழியன் வயிற்றில் அடிக்கும் செயல் அல்லவா?

மிஷனரிகளின் அல்லது ஊழியர்களின் PF பணத்தை வங்கியில் சேர்க்காதவர்களின் கணக்கு விவரங்களையும் அந்த ஸ்தாபனங்களின் பெயர்களையும் PF **அலுவலகத்திலேயே** நீங்கள் கேட்டறியலாம்.

ஸ்தாபன தலைவர்களால் ஏமாற்றப்பட்ட ஊழியர்களின் கண்ணீர் கடிதம் குவிகின்றன. அரசாங்கம் PF **செலுத்தாத** மிஷனரி ஸ்தாபனங்கயையும், **ஊழிய** ஸ்தாபனங்களையும் விரைவில் **பிடிக்கபோகிறது.**

அந்த ஸ்தாபன தலைவர்களை **கைது செய்து** அழைத்து போவதை **தினசரி செய்தி தாள்களில்** காணும் நாள் மிகவும் சமீபம்.

அது அனைத்து மிஷனரி ஸ்தாபனத்துக்கும் அவபெயர் உண்டாக்கும். கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படும்.

இதை வாசிக்கும் அனைத்து மிஷனரி ஸ்தாபனங்களுக்கும், ஊழிய ஸ்தாபனங்களுக்கும் எச்சரிக்கை அறிவிப்பாக வெளியிகிறேன்.

சில மிஷனரிகள்- ஊழியர்களின் சார்பாக அவர்கள் ஊழியம் செய்த ஸ்தாபனத்திற்கு ஓய்வுபெற்ற மிஷனரிகளுக்கு அவர்களின் PF பணத்தை அவர்களுக்கு கொடுக்க சொல்லி சில ஸ்தாபன தலைவர்களுக்கு நானே கடிதம் எழுதியிருக்கிறேன்.

அவர்கள் தேவனுக்கு பயப்படாமல், அரசாங்கத்துக்கும் பயப்படாமல் அவர்களின் அலட்சியமும், துணிகரம்கொள்வதும் நீண்டு போனால் நிச்சயம் அந்த ஸ்தாபனத்தின் பெயர்களை **ஜாமக்காரனில்** வெளியிடுவேன்.

இது அந்த ஸ்தாபனத்தை அவமானபடுத்த அல்ல. **ஓய்வுபெற்ற ஊழியர்களின் கண்ணீரை துடைக்க** இதை நான் செய்வது அவசிமாகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

**கேள்வி :** ஏஞ்ஜல் TV யின் **மூவரணியில்** ஒருவரான சகோ. வின்சென்ட் செல்வகுமார் தன் பத்திரிக்கையில் 2013 நவம்பர் பக்கம் 11ல் நாம் யாவரும் **வானத்திலும் ஊழியம் செய்ய தயாராக** வேண்டும். நமக்கு **வானத்திலும் ஊழியம் உண்டு** என்கிறாரே? வானத்தில் யாருக்கு சுவிசேஷம் அறிவிக்க போகிறார். எப்படி ஊழியம் செய்வார் ?

**பதில் :** **மூவரணியினர்** மோகன் C. லாசரஸ், சாது செல்வராஜ் வின்சென்ட் செல்வகுமார் ஆகிய இந்த மூவரும் காணிக்கை **அனுப்பியவர்களையெல்லாம்** வானத்தில் ஊழியம் செய்ய தங்களோடு அழைத்து செல்லும்போதுதான் அது என்ன? என்று காணிக்கை கொடுத்தவருக்கு விளங்கும். இவர்களின் பத்திரிகையை வாசிப்பவர்களையும், ஏஞ்ஜல் TVயையும், ஆசீர்வாதம் TVயையும் நம்புகிறவர்களையும் கர்த்தர்தான் காப்பாற்ற வேண்டும்.

அப்படியே ஆசீர்வாதம் TVயில் கூறப்படும் **பொய் சாட்சிகள்,** அவர்களின் பிழையான வேத வசன **வியாக்கியானம்** இவைகளை கேட்பவர்களுக்கும் இவர்களுக்கு பணம் அனுப்பி இவர்கள் ஊழியத்தை தாங்குபவர்களுக்கும் கடைசி நியாய தீர்ப்பு நாட்களில் இந்த தவறான ஊழியர்களுக்கு கிடைக்கும் தண்டனையில் நிச்சயம் இவர்களுக்கும் பங்கு உண்டு.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி :** நீங்கள் ஜாமக்காரனில் குறிப்பிட்டதை போல உண்மையான **அன்னிய பாஷையை** பேசும் ஊழியர்கள் இந்த உலகில் ஒருவர் கூட இல்லையா?

**பதில் :** பரிசுத்த ஆவியின் அடையாளம் **அன்னிய பாஷையே அல்ல** என்று வேதம் கூறும்போது, அன்னிய பாஷை என்ற ஒன்று இன்று இல்லையே ! அப்படியானால் அவர்கள் பேசுவதாக கூறும் பாஷையும் **பொய்தானே** !

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி :** நீங்கள் ஜாமக்காரனில் உங்கள் ஊழியத்துக்கு ஜாமக்காரன் பத்திரிகை அச்சடி செலவுக்கு, **ஸ்டாம்ப் செலவுக்கு** இதுவரை காணிக்கை எதுவும் கேட்டதில்லை என்பதை நாங்கள் யாவரும் அறிவோம், பின் எப்படி உங்கள் ஊழியங்களையும், பத்திரிகை ஊழியங்களையும், எப்படி தொடர்ந்து நடத்தமுடிகிறது. மேலும் **ஜாமக்காரன் செலவுக்காக** மாதா மாதம் பல லட்சங்கள் செலவழித்து எப்படி நடத்துகிறீர்கள்? அதன் இரகசியம்தான்என்ன?

அதே சமயம் உங்கள் **5 வங்கி அக்கவுண்ட்** எண்கைளை குறிப்பிட்டு வங்கிகளின் பெயர்களையும் குறிப்பிட்டு அதை மாதா மாதம் வெளியிடுகிறீர்களே? இது **மறைமுகமாக பணம் கேட்பதுபோல்** இருக்கிறதே?

**பதில் :** என் ஊழியங்களில் என் வாழ்க்கையில் இரகசியங்கள் எதுவும் இல்லை. ஊழியக்காரன் ஒளிவு - மறைவு இல்லாமல் திறந்த புஸ்தகமாக இருக்கவேண்டும் என்பதில் ஒவ்வொரு நிமிடமும் நான் ஜாக்கிறதையாக இருக்கிறேன்.

என் ஊழியங்களையும் பத்திரிகை நடத்தும் செலவுகளையும் எப்படி சந்திக்கிறேன் என்பதையும், **பணம் கேட்காமலே** மக்கள் எப்படி என் தேவைகளை பூர்த்தி செய்கிறார்கள் என்பதையும் வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை ஜாமக்காரனில் வெளியிட்டிருக்கிறேன்.

அதை மறுபடியும் இப்போது எழுதினால் அதையும் நீங்கள் குறிப்பிட்டு மறைமுகமாக பணம் கேட்கிறீர்கள் என்றும் கூறுவீர்கள். ஆகவே நீங்கள் என் பழைய ஜாமக்காரன் பத்திரிகையை பார்த்து அந்த விவரங்களை அறிந்துகொள்ளுங்கள்.

ஜாமக்காரனுக்கு பல ஆயிரக்கணக்கான **புது வாசகர்கள்** ஒவ்வொரு **வாரமும்.** ஒவ்வொரு **மாதமும்** பெருகிகொண்டே இருக்கிறார்கள்.

அவர்களில் பலர் உங்கள் **வங்கி அக்கவுண்ட் நம்பரும், வங்கி பெயரும்** எழுதுங்கள் என்று அடிக்கடி கடிதம் அல்லது E-mail மூலமாக என்னிடம் கேட்பதால் அவர்களுக்கு தனித்தனியாக கடிதம் எழுதி **வங்கிகளின்** எண்களை எழுதி அறிவிக்க எனக்கு நேரமில்லை. ஆகவே வருடத்திற்கு மூன்றுமுறை அல்லது இரண்டுமுறை நான் உபயோகிக்கும் அனைத்து வங்கிகளின் பெயர்களையும், **அக்கவுண்ட் எண்களையும்** ஜாமக்காரனில் எழுதி அறிவிக்கிறேன்.

ஆனால் ஒரு இடத்திலாவது உங்கள் பணத்தை அல்லது காணிக்கையை இந்த குறிப்பிட்ட வங்கியில்போடுங்கள் என்று கேட்டதையோ எனக்கு பணத்தேவை அதிகமென்றோ நான் எழுதியதாக நீங்கள் சுட்டிகாட்ட முடியுமா?

இப்போதெல்லாம் M.O. **மணி ஆர்டர்** வழியாக காணிக்கை அனுப்புவதால் தபால் கமிஷன் செலவு அதிகமாகிறது. அந்த செலவை குறைக்க **வங்கி வழியாக Online மூலமாக** பணம் அனுப்பும் போது கமிஷன் செலவு குறைகிறது. அது மட்டுமல்ல பணம் வங்கி வழியாக அனுப்பிய உடனே 20 நிமிடத்தில் காணிக்கை என் வங்கி கணக்கில் வந்தடைகிறது. MO கமிஷனோ, சர்வீஸ் சார்ஜ் ஆகியவைகளை மிச்சப்படுத்த வாசகர்கள் **வங்கி அக்கவுண்ட் எண்களை** IFC Code நம்பர்களை கேட்கிறார்கள் அதனால் வங்கி பெயர்களை வெளியிடுகிறேன்.

இப்படி வங்கி பெயர், எண் இவைகளை வாசகர்கள் எண்ணிடம் கேட்பது எனக்கு பிடிக்காது என்றும் நீங்கள் சேலம் வந்து (என் ஊருக்கு வந்து) வங்கி பெயர்களை நீங்களே கண்டுபிடித்துக் கொள்ளுங்கள் என்று ஜாமக்காரனில் நான் எழுதினால் நீங்கள் அதை சரி என்று கருதுகிறீர்களா? என் **உண்மை வாசகர்** குடும்பத்தினர் யாரும் **இப்படிப்பட்ட கேள்விகளை** கேட்கவே மாட்டார்கள் என்பதை நான் அறிவேன்.

நீங்கள் என் ஜாமக்காரனை ஓசியில் வாங்கி வாசிப்பவராக இருக்கும் என்று யூகிக்கிறேன். உங்கள் கேள்விக்கு விளக்கம் போதுமா?

பரிசுத்த ஆவியானவரே என் வாசகர்களை தூண்டி என் ஊழிய தேவைகளை சந்திக்க அவர்களாகவே எனக்கு பணம் அனுப்புவதால்தான் கடந்த 47 வருடங்களாக என் பத்திரிகை ஊழியம், என் ஊழியம் சிறப்பக செயல்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி :** நீங்கள் ஜாமக்காரனில் எழுதியபடி பெந்தேகோஸ்தேகாரர்களுக்கு மிஷனரிபாரம் கிடையாது என்றும், **வட இந்திய ஆதிவாசிகள்** 3 கோடி பேர் இன்னும் இயேசுவை அறியவில்லை.

அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க CSI சபைகளை தவிர பெந்தேகோஸ்தே சபைகளிலிருந்து ஒரு மிஷனரிகூட மிஷனரியாக ஊழியம் செய்ய போனதில்லை என்று சவால்விட்டு திருநெல்வேலி கூட்டத்தில் பேசினீர்களே? அது பொய், பெந்தேகோஸ்தே சபைகளும் மிஷனரிகளை தாங்குகிறது. **சென்னை சின்னமலை AG சபையிலிருந்து** ஏராளமான மிஷனரிகளை தாங்குகிறார்கள் என்று கேள்விபட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல, திருநெல்வேலியில் எங்கள் சபையும் 6 மிஷனரிகளை தாங்குகிறது. நீங்கள் உண்மையைதான் ஜாமக்காரனில் எழுதுவீர்கள் என்ற பெரிய பெயர் உங்களுக்கு உண்டே, மேலே கூறிய செய்தி பொய் இல்லையா ?

**பதில் :** ஐயா, **அன்னியபாஷை** என்ற பெயரில் பொய் பேசுகிறவரே! நீங்கள் நிச்சயம் பெற்தேகோஸ்தே சார்ந்தவர் என்பதை உங்கள் கேள்வியிலேயே விளங்கிக்கொண்டேன். இவ்வளவு நீளமாகவா உங்கள் கேள்வியை கேட்பது?

நான் **ஜாமக்காரனில் எழுதியது எதுவும் பொய் அல்ல** என்று இப்போதும் அரிதியிட்டு கூறுகிறேன் என் பதிலை அறைகுறையாக படித்துவிட்டு அல்லது நுனிபுல் மேய்ந்த மாதிரி வாசித்துவிட்டு இப்படி கேள்வி கேட்க துணியலாமா?

**மிஷனரிகளை தாங்குவது என்பது வேறு, மிஷனரிகளாக சென்று ஊழியம் செய்வது** என்பது வேறு.

இந்த சின்ன வித்தியாசம்கூட அறியாதவரா நீங்கள். CSI சபைகளிலிருந்து சரியாக மனம்திரும்பின அனுபவத்துடன் ஜெபக்குழுக்களில் இனைந்து பல மாதங்களாக சுவிசேஷம் கேட்டிராத அந்த ஆதிவாசி மக்களுக்காக கண்ணீர்விட்டு, பாரத்தோடு அழுது ஜெபிப்பவர்களே அந்த மிஷனரி ஊழியத்தக்கு தகுதியானவர்கள். அப்படிபட்டவர்கள் தான் அந்த மிஷனரி பனிதளத்தின் பாடுகளை, குறைவுகளை, குழந்தைக்கு வியாதி வந்தால், ஆஸ்பத்திரிக்கு கூட தூக்கி செல்லமுடியாத தூரத்தில் காட்டுக்குள் கர்த்தரையே பரம வைத்தியனாக விசுவாசித்து ஜெபித்து குழந்தைக்கு சுகம் கர்த்தரிடமிருந்து பெற்று தருகிறார்களே ! அப்படிப்பட்ட மிஷனரி

தம்பதிகளின் விசுவாசம் எங்கே? சபைக்குள்ளேயே பாஷைகள் என்ற பெயரில் உளரிக் கொண்டிருக்கிறீர்களே! உங்கள் விசுவாசம் எங்கே? இயேசுஇல்லாது அழிந்துபோகும் அந்த ஆத்துமாக்களைக்குறித்து கொஞ்சமாவது உங்கள் சபைகளுக்கு பாரம் உண்டா?

ஒரு சில பெந்தேகோஸ்தே சபைகள் தான் FMPB போன்ற மிஷனரி ஸ்தாபனங்களில் உள் மிஷனரிகளை தாங்க பணம் அனுப்புகிறது. அதுவும் தொடர்ந்து அனுப்புவது இல்லை. அன்னிய பாஷை பேசும் **சகோ.அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்கள் நடந்தும் GEMS மிஷனரிகளைகூட உங்கள் பெந்தேகோஸ்தே சபையினர் தாங்குவதில்லை. காரணம் **சகோ. அகஸ்டின் ஜெபகுமார்** அவர்கள் அன்னிய பாஷை என்ற பெயரில் உளரும் பெந்தேகோஸ்தே சபைகளின் **மாய மாலங்களை கூட்டதுக்கு கூட்டம் மேடைக்கு மேடை சென்று பெந்தேகோஸ்தே** சபைகளை தாக்கு தாக்கு என்று தாக்குகிறாரே? அதனால் பெந்தேகோஸ்தே சபையினருக்கு அவர்மேல் வெறுப்பு. அவர் உண்மையைத்தானே கூறுகிறார். சரிப்படுத்திக் கொள்ளுவோம் என்ற எண்ணம் இல்லை. நாலுமாவடி மோகன் C. லாசரஸ் அவர்ளையும் அவரின் **தவறான உபதேசங்ளையும் தவறான தீர்க்கதரிசனங்களையும்** மேடையில் **அகஸ்டின் ஜெபக்குமார்** தாக்கி பேசியாதால் இப்போது GEM மிஷனரி ஊழியங்களை மோகன் சி. லாசரஸ் தாங்குவதை பெரிய அளவு குறைத்துகொண்டதாக அறிந்தேன்.

❖ **டாக்டர் Rev.தியோடர் வில்லிம்ஸ்** அவர்களிடம் ஒரு வாலிபன் மிஷனரி ஊழியத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்து மிஷனரியாக போக விண்ணப்பித்திருந்தான். அவன் IEM மிஷனரி ஊழியத்தில் சேர்ந்துகொண்டு மிஷனரி பயிற்சிக்காக அவன் அனுப்பப்பட்டான்.

புதிய மிஷனரிகளுக்காக ஒரு கூட்டம் நடந்தது அதில் டாக்டர Rev தியோடர் வில்லியம்ஸ் பிரசங்கம் நிகழ்த்தினார். கூட்டம் முடிந்தவுடன் அந்த குறிப்பிட்ட வாலிபன் தியோடர் வில்லியம்ஸ் அவர்களிடம் ஜெபிக்க வந்தான். அப்போது அவன் கூறினான். அண்ணன்! எனக்கு சில வாரங்களாக என் ஊழியத்தைப்பற்றி குழப்பம் அதிமாகிறது. நான் M.A. படித்திருக்கிறேன். என் உறவினர் மூலமாக எனக்கு செய்தி வந்தது. அரேபிய நாடுகளுக்கு(Gulf) என் படிப்புக்கு ஏற்ற வேலை காத்திருப்பதாகவும் உடனே பாஸ்போர்ட் விபரம் அனுப்பும்படியாகவும் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இதனால் என் மனதில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதாவது அரேபிய நாட்டில் நான் வேலையில் சேர்ந்தால் நிறைய சம்பளம் கிடைக்கும் என் சம்பள தசம பாகத்தில் மட்டும் **8 மிஷனரிகளை** தாங்கும் அளவு பணம் கிடைக்கும். இப்போது நான் ஒருவன் மட்டுமே மிஷனரியாக போகப்போகிறேன். அதைவிட 8 மிஷனரிகளை நானே என் காணிக்கை கொண்டு தாங்கி பணிதளத்துக்கு அனுப்பலாமே!. ஒரு வருடத்தில் **12 மிஷனரிகளை** அனுப்பக்கூடிய வருமானம் எனக்கு பெருகும். என் பெற்றோரும் அந்த திட்டம் நல்லது என்கிறார்கள். எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது என்றான்.

அப்போது Rev. தியோடர் வில்லியம்ஸ் கூறினார், தம்பி! இரண்டு வருடங்களுக்குமுன் என் கூட்டத்தில் ஜெபத்தில் நீ செய்த தீர்மானம் என்ன? **கர்த்தாவே என்னை அனுப்பும்** என்பது தானே! இப்போது **அவர்களை அனுப்பும்** என்று ஒரு புது திட்டம் எப்படி வந்தது?. கர்த்தருக்கு நீதான்வேண்டும்,**உன் பணஉதவி அல்ல.** 30 மிஷனரிகளைகூட தாங்க உனக்கு பணம் பெருகும் அது உன் உள்ளத்துக்கும்,உன் பெற்றோர் உள்ளத்துக்கும் கேட்பவர்கள் உள்ளத்துக்கும் நல்ல திட்டமாக தோன்றும். ஆனால் தேவ சித்தம் அதுவல்ல. **உன் நினைவுகள்** என் நினைவுகள்

அல்ல. **உன் வழிகள் என் வழிகள் அல்ல.** என்று கர்த்தர் கூறுகிறார் என்பதை மறக்க பிசாசு இப்படியெல்லாம் கூறி நல்ல திட்டம் போல கேட்பவர் எல்லாரையும் நம்ப வைப்பான். உன் திட்டத்தை நியாயப்படுத்துவதில் அவன் மிகவும் ஞானமுள்ளவன். ஆதிவாசிகளை குறித்தும் பாரத தேசத்தை குறித்தும் பாரப்பட்டு அழுதவன் நீ, மிஷனரி தரிசனம் பெற்றவன் நீ. ஆகவே **நீ தான் கர்த்தருக்கு வேண்டும். உன் பணம் அல்ல என்று கூறி அனுப்பினார்.**

இப்படி சுலபமான வழிகளைத்தான் பெத்தேகோஸ்தே சபைகள் தெரிந்தெடுக்கிறது. பெந்தேகோஸ்தே சபை பாஸ்டருக்கு ஆதிவாசிகளைப்பற்றியோ, சுவிசேஷம் கேளாத இந்திய மக்களைப்பற்றியோ கவலையில்லை, பாரமில்லை. கிறிஸ்தவர்களை கிறிஸ்தவர்களாக்குவது தான் உங்கள் சபை பாஸ்டர்களின், விசுவாசிகளின் நோக்கமாக இருக்கிறது. பெந்தேகோஸ்தே சபையிலுள்ள விசுவாசிகளின் பிள்ளைகள் வாலிபர்கள் யாவரும் தாங்களும் ஒரு **பாஸ்டராக** வேண்டும் என்ற ஆசைதான் அவர்களுக்குள் இருக்கிறது. மிஷனரியாக காடுகளுக்குள் சென்று **இயேசுவை அறிவிக்கவேண்டும்** என்று யாராவது ஆசைப்பட்டிருக்கிறார்களா? இல்லையே! காரணம் ஒருவர் பாஸ்டராக ஊழியம் செய்தால் **தசம பாகம் கிடைக்கும்**! சீக்கிரமே வெளிநாட்டு பண உதவி செய்பவர்களின் தொடர்பும் கிடைக்கும், சபை மக்களிடையே பாஸ்டர் என்ற பெரிய மரியாதை கிடைக்கும். **சபை காணிக்கை வரவை** யாரிடமும் காட்ட வேண்டியதில்லை. காணிக்கையைப்பற்றி சபை மக்கள் யாரும் பாஸ்டரை கேட்கவும் முடியாது. இத்தனை சவுகரியங்கள் **மிஷனரி ஊழியத்தில்** கிடைக்காது என்பது இவர்களுக்கு நன்றாக தெரியும். ஆகவே பெந்தேகோஸ்தே சபை வாலிபர்கள் மட்டுமல்ல, **பெந்தேகோஸ்தே சபை பெற்றோர்களும்** தன் பிள்ளைகள் **ஒரு பாஸ்டராக வரவேண்டும்** என்றுதான் ஆசைபடுகிறார்கள். ஒருவருக்காவது **தன்பிள்ளை மிஷனரியாக மலைகள்தோறும்** ஏறி சென்று **சுவிஷேசம் அறிவிக்க வேண்டும்** என்ற பாரமோ ஆசையோ இல்லையே!

ஆனால் CSI சபையில் **மனம் திரும்பி** இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி உயர்ந்த படிப்பு படித்திருந்தாலும், **டாக்டர் படிப்பு** படித்திருந்தாலும் தன் **படிப்பு,**தான்பெற்ற டிகிரி, பதவி அதிலிருந்து வரும் **வருமானம்** யாவையும் **துச்சமாக எண்ணி அத்துனையும் விட்டு மிஷனரியாக** ஒப்புக்கொடுத்து வெரும் **4000 ரூபாய் சம்பளமாக** பெற்று மிஷனரி பணிகளை இவர்கள் செய்கிறதை உங்கள் பெந்தேகோஸ்தே சபைகளில் எங்கேயாவது நீங்கள் கண்டிருக்கிறீர்களா? **கிறிஸ்து** காட்டுக்குள் இருக்கும் அந்த **ஆதிவாசிகளுககாகவும்** இரத்தம் சிந்தினார் என்பதை மறக்க வேண்டாம்!

இந்த கேள்வி கேட்ட நீங்கள் என் பதிலில் நியாயம் இருக்கிறது! உண்மை இருக்கிறது என்று உணர்ந்தால் உங்கள் சபை மூப்பர்களிடம், பாஸ்டர்களிடம் நான் எழுதியதையும், நம் பாரததேசத்தின் மிஷனரி தேவைகளையும் கூறி பாரத தேசத்தில் **சுவிசேஷத்துக்கு** இப்போதுள்ள **வாசல்கள் அடைக்கப்படுவதற்குமுன்** நம் சபையில் இருந்தும் **மிஷனரிகள்** எழும்பவேண்டும் என்ற **தெய்வ செய்தியை** ஒவ்வொரு வாரமும் **உங்கள் பாஸ்டர்களை சபை** மக்களிடம் பகிர்ந்துகொள்ள சொல்லுங்கள்.

**கர்த்தர் உங்களை சபை பாஸ்டர்களை கணக்கு கேட்பார் என்பதை மறக்க வேண்டாம். உங்களையும் கணக்கு கேட்பார் என்பதை மறக்கவேண்டாம்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# என் வெளிநாட்டு ஊழியங்கள்:
## (MALAYSIA & AUSTRALIA)

| நாடு | தொடர்புக்கொள்ள | தொலைப்பேசி |
|---|---|---|
| **MALAYSIA** | Rev.HENDRY | 0060-1-192 467 226 |

2016 NOV 1 to 6 - NOV 1 - **PENANG** , NOV -2 - **IPOH**, NOV -3 - **KULALUMPUR**, NOV - 4- **NEGERISEMBILAN,** NOV-5-**JOHOR**

| | | |
|---|---|---|
| **AUSTRALIA** | Mr.JAYAN CHRISOSTOM | - 409809002, 397422278(H) |
| 2016 NOV 9 to 13 | **(MALAYALAM)** - MELBOURNE | |
| 2016 NOV 17 to 20 | Bro.VINO APPATHURAI<br>(**TAMIL)** - MELBOURNE) | EMAIL.<br>VINOJIT@YAHOO.COM.AU |
| 2016 NOV 21 to 23 | Mr.THOMAS(MALAYALAM)<br>**SYDNEY** | - 0061-288248927 |
| 2016 NOV 23rd to 29th | Bro.JOHN CUMARASAMY<br>(**TAMIL**) - SYDNEY<br>Email- jcumarasamy@optusnet.com.au | +61 418 962 911 |
| 2016 DEC 1 to 4 | Dr.CHARLES JEEVARAJ<br>**PERTH** | 00610405486873 |

**குறிப்பு:** **தனிப்பட்ட ஆலோசனைக்கும்(Counseling), ஜெபத்துக்கும் வேத வசன சந்தேகங்கள் கேட்பதற்கும், மேலே குறிப்பிட்ட தொலைபேசியில் உள்ள மலேசியா மற்றும் ஆஸ்ட்ரேலியா நபரோடு தொடர்புக்கொண்டு நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் நாள், நேரம் ஆகியவைகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும். அங்கு உங்களுக்காக ஆலோசனையும், வேதவசன விளக்கமும் உங்களுக்கு கொடுத்து உங்களுக்காக ஜெபிக்கப்படும்.**

## புதிய மாடரேட்டர் தேர்தல்

வழக்கமாக CSIயில் டெப்டி மாடரேட்டர் பதவி வகிப்பவர்தான் அடுத்த மாடரேட்ட்ராக தேர்ந்தெடுப்பது வழக்கம். அதுவும் வழமையாக டெப்டி மாடரேட்டர் பிஷப்பாக பதவி வகிக்கும் ஊரிலேயே மாடரேட்டர் எலக்ஷனை CSI சினாட் நடத்தும். ஆனால் இம்முறை வேறு டையோசிஸ் **பிஷப் ஒருவரை** மாடரேட்டராக தேர்ந்தெடுக்க இரண்டு குழுவினர் **கோடிகளோடு** அலைவதாக கேள்விப்படுகிறோம். இப்போதுள்ள டெப்டி மாடரேட்டர் அவர்கள் அந்த **இரண்டு குழுவினரைவிட அதிக கோடிகள்** கொடுத்தால் **மாடரேட்டர் பதவி** தானாக இவருக்கு கிடைக்கும என்று நம்புகிறார்கள். சினாட் **நிர்வாக கமிட்டி** எந்த நபரை **மாடரேட்டர்** பதவிக்கு தேர்வு செய்து அறிவித்தாலும் இப்போதுள்ள **மாடரேட்டர்** தன் **வீட்டோ** அதிகாரத்தை பயன்படுத்தி அதிக பணம் கொடுப்பவர்களுக்கு மாடரேட்டர் பதவி வழங்க முடியும் என்று கூறப்படுகிறது. இப்படி கடந்த பல வருடங்களாக பிஷப் பதவி விலை பேசப்படுவது வழக்கமாகிவிட்டது. எங்கும் வியாபாரம், எதிலும் வியாபாரம் கிறிஸ்தவ ஊழியம் வியாபாரமாகிவிட்டது. கர்த்தருடைய ஊழியமான **மாடரேட்டர்** டெப்டி மாடரேட்டர். **பிஷப்** பதவிகள் யாவும் பணத்தால் நிர்ணயிக்கப்படுவது CSI படுபாதாளத்தை நோக்கிபோய் கொண்டிருப்பதைத்தான் காட்டுகிறது.

## வெளிநாட்டில் உள்ள ஜாமக்காரன் வாசகர்களுக்காக,

கடந்த 2016 **ஜூலை - ஆகஸ்ட்** மாத ஜாமக்காரனை ஒரே கவரில் வைத்து இரண்டு மாத ஜாமக்காரனையும் ஒன்றுசேர்த்து அனுப்பியுள்ளேன். **ஜூலைமாத** ஜாமக்காரனை வெளிநாடுகளுக்கு உடனே அனுப்பஇயலவில்லை. முன்பு நான் கூறியபடி, இப்போது வெளிநாட்டுக்கு அனுப்பும் புஸ்தங்களுக்கு ஸ்டாம்ப் விலை கூடிப்போனதால்தான் ஜூன் மாத ஜாமக்காரனை உடனே வெளிநாடுகளுக்கு அனுப்ப இயலாமல்போனது.

அதற்குள் **ஆகஸ்ட்** மாத ஜாமக்காரன் அச்சடித்து வந்துவிட்டது. எப்படியோ ஜூலை-ஆகஸ்ட் ஆகிய இரண்டுமாத ஜாமக்காரனை மீதி வைக்காமல் எல்லா நாடுகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டேன். அதனால்தான் கம்ப்யூட்டர் உள்ளவர்கள் உங்கள் Email ID எண் என்னுடைய E.mailக்கு (jamakaran@yahoo.com) அனுப்பிவைத்தால், **PDF மூலமாக நீங்கள் டவுன்லோடு செய்து பிரிண்ட்** எடுத்து புஸ்தகங்கள் போலவே நீங்கள் வாசிக்கலாம். மற்றவர்களுக்கும் வாசிக்க கொடுக்கலாம்.

குறிப்பு : **வெளிநாட்டில் வாழும் ஜாமாக்காரன் வாசகர்களுக்குமட்டும்தான்** இந்த வேண்டுகோள் **இந்தியாவில் உள்ளவர்களுக்கல்ல.**

SEPTEMBER 2016

# Printed Book/Book Post

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.